**இலங்கை தேயிலை சபை - 2024**

-----------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தேயிலை சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான கூற்று, ஏனைய விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கி 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலை சபை அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து சபையின் நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை காட்டும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இலங்கை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் சபையை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் மீளாய்வாண்டின் இறுதியளவில் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்த ரூபா 167,519,802 கிரயமான சொத்துக்கள் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் அச்சொத்துக்களின் விளைதிறனான ஆயுட்காலத்தினை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் அல்லது கணக்குகளில் வெளிப்படுத்துதல் செய்யப்பட்டிருக்கவில்லை. | சபையின் சொத்துக்களின் விளைதிறனான ஆயுள் காலத்தினை மீண்டும் மதிப்பீடு செய்தலினை 2025 ஆம் ஆண்டின் போது முடிவுறுத்துவதற்கும் 2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கும் இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிவடைந்திருந்த போதிலும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் சம்பந்தமாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் பிரகாரம் இளைப்பாற்று பிரதிபலன் பொறுப்பினை கணக்கீடு செய்யும் | 2024 ஆம் ஆண்டின் பிழைகளை சரிசெய்தல்கள் தொடர்பான வெளிப்படுத்தல்ளக் 2025 | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இளைப்பாற்று பிரதிபலன் |

| | | |
|---|---|---|
| போது கழிவு விகிதமாக 11.47 சதவீதமான நீண்டகால திறைசேரி பிணைமுறி வட்டி விகிதம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் சபையினால் 8.96 சதவீதமான குறுங்கால திறைசேரி உண்டியல் வட்டி வீதம் பயன்படுத்தப்பட்டிருந்ததனால் நிதி ஆண்டின் இறுதியில் இளைப்பாற்று பிரதிபலன் கிரயம் ரூபா 384,779 குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டு தீர்மானிக்கப்பட்ட ஊழியர் பிரதிபலன் பொறுப்பின் நிகழ்கால பெறுமதியும் இளைப்பாற்று பிரதிபலன் அடிப்படையிலான உள்ளபடியான நட்டமும் முறையே ரூபா 9,130,758 மற்றும் ரூபா 9,515,537 ஆல் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பொறுப்பினை கணக்கீடு செய்யும் போது கழிவு விகிதமாக நிண்டகால திறைசேரி பிணைமுறி வட்டி வீதம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) “சீலோன்” டீ இற்காக பூகோள மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தில் 06 ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சபையினால் 2022 ஆம் ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தும் அதற்காக 2017 ஆம் ஆண்டின் போது நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 9,414,411 செலவினை மீண்டும் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டின் போது நடைமுறைப் பொறுப்புக்கள் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டு மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் வைப்பு குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பின் மூலம் 2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்பட்டது. | நிதி ஆண்டின் இறுதியில் அட்டுறு செலவுகளை மீளாய்வு செய்து தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) கடந்த ஆண்டு தொடர்பாக 2024 பெப்ரிவரி 07 ஆந் திகதி பிரதான களஞ்கியத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 952,695 தொகையான பதவியினர் | 2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்து சமர்ப்பிப்பேன். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கணக்கு காலப்பகுதிக்கான |

| | | | |
|---|---|---|---|
| | தேயிலை இருப்பு (Staff Tea) முன்னைய ஆண்டிற்கான ஒரு செலவாக அடையாளம் காணப்படாததனால் மீளாய்வாண்டின் இறுதியில் அத்தொகையால் வழிச்சரக்கின் பெறுமதியும் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களும் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | செலவுகளை சரியாக அடையாளங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |
| (இ) | சபையின் பூர்த்தியான தேயிலையை பொதி செய்பவருக்கு (SLTB Official Packer) கடந்த நிதி ஆண்டில் பெற்ற இருப்பிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 6,396,185 தொகையை மீளாய்வாண்டிற்கான விற்பனைக் கிரயத்திலிருந்து கழிக்கப்பட்டதனால் அத்தொகையால் விற்பனைக் கிரயம் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்து சமர்ப்பிப்பேன். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கணக்கு காலப்பகுதிக்கான செலவுகளை சரியாக அடையாளங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் சபையின் கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி மீதி ரூபா 38,741,610 ஆக இருந்த போதிலும் பேரேட்டின் பிரகாரம் அம்மீதி ரூபா 50,022,298 ஆக இருந்ததனால் ரூபா 11,280,688 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்து சமர்ப்பிப்பேன். | பெறவேண்டிய வருமானங்களை சரியாக அடையாளங்கண்டு கணக்குவைத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் சபையின் நிலையான வைப்புக்கள் மீது பெற்ற வட்டிக்காக நிறுத்திவைத்தல் வரி கழித்தல் பெறுமதி ரூபா 3,077,643 ஆக இருந்த போதிலும் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் வரியினை கணிப்பீடு செய்யும் பட்டோலைக்கு இணங்க அப்பெறுமதி ரூபா 4,251,665 ஆக இருந்ததனால் ரூபா 1,174,022 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | கணக்கீடு செய்யும் போது உருவாகிய பறறாக்குறை 2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வட்டி வருமானத்திற்காக நிறுத்திவைக்கப்பட்ட வரியினை சரியாக கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | சபையினால் நிறுத்திவைத்தல் வரி கழிக்கப்படாத 126,997,434 தொகையான திறைசேரி உண்டியல்களுக்காகப் பெற்ற | 2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்பட்டுள்ளதுடன் வரி | நிறுத்தி வைத்தல் வரியினை சரியாக அடையாளங்கண்டு கணக்குகளில் |

| | | | |
|---|---|---|---|
| | வட்டிப் பெறுமதிக்காக நிறுத்திவைக்கப்பட்ட வரியாக ரூபா 4,678,853 கணக்கீடு செய்யப்பட்டதனால் அத்தொகையால் வட்டி வருமானம் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டு வருமான வரி செலவு குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | பற்றாக்குறையினை 2025 ஆம் ஆண்டின் போது செலுத்துவதற்கும் 2024/25 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (எ) | ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையே அமுல்படுத்தப்பட்ட தேயிலை மற்றும் எரிபொருள் உடன்படிக்கையின் கீழ் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்ற நிதியை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்ததன் மூலம் கடந்த ஆண்டில் பெற்ற வட்டியிலிருந்து கழித்து மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் வைப்புக் கணக்கிற்குச் செலவுவைக்கப்பட வேண்டிய ரூபா 9,628,606 பணம் சபையின் ஒரு செலவாக அட்டுறு செலவாக்கப்பட்டிருந்தது. மீாய்வாண்டின் போது அப்பதிவு பிழை என்பதனால் ரூபா 9,628,606 தொகையால் அட்டுறு செலவு மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டு மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் வைப்பும் நிறுத்திவைத்த உழைப்புக்களும் அத்தொகையால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீட்டு சீராக்கல்களை நாட்குறிப்பின் மூலம் சரிசெய்து சமர்ப்பிப்பேன். | நிதி ஆண்டின் இறுதியில் அட்டுறு செலவுகளை மீளாய்வு செய்து தேவையான செம்மையாக்கல்கள் செய்தல் வேண்டும். |
| (ஏ) | கடந்த ஆண்டு தொடர்பாக அட்டுறு செலவாக்கப்பட்ட ரூபா 7,360,900 தொகையினை மீளாய்வாண்டில் செலுத்தும் போது அட்டுறு செலவுக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் வரி முதலீட்டு வட்டி வருமானக் கணக்கிற்கு வரவு வைத்ததனால் ரூபா 7,360,903 தொகையால் மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் முதலீட்டு வட்டி வருமானம் கணிப்பீடு செய்யப்பட்டு அட்டுறு செலவுகள் | உரிய கணக்கீட்டு சீராக்கல்களை நாட்குறிப்பின் மூலம் சரிசெய்து சமர்ப்பிப்பேன். | அட்டுறு கொடுப்பனவுகளை தீர்த்துவைக்கும் போது சரியான கணக்குகளின் மூலம் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்லத் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்ற நிதிக்காக மீளாய்வாண்டில் பெற்ற ரூபா 3,186,800 வட்டி வருமானமானது சபையின் நிதிக்காக பெற்ற வட்டி வருமானமாக நிதிக்கூற்றுக்களில் அடையாளங்காணப்பட்டதனால் அப்பெறுமதியால் ஆண்டிற்கான மிகை மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய பெறுமதி குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய கணக்கீட்டு சீராக்கலினை நாட்குறிப்பின் மூலம் சரிசெய்து சமர்ப்பிப்பேன். | சபையின் செயற்பாடுகளின் மூலம் உருவாகிய வருமானத்தை சரியாக அடையாளங்கண்டு கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமு. |
| (ஒ) | சபையின் நிலையான வைப்புக்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 13,901,940 வட்டி வருமானமானது இலங்கை பெற்றோலியக் கூட்:டுத்தாபனத்திடமிருசந்து பெற்ற நிதிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியதினால் அப்பெறுமதியால் மீளாய்வாண்டிற்கான சபையின் மிகை குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய பெறுமதி மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய கணக்கீட்டு சீராக்கலினை நாட்குறிப்பின் மூலம் சரிசெய்து சமர்ப்பிப்பேன். | சபையின் செயற்பாடுகளின் மூலம் உருவாகிய வருமானத்தினை சரியாக அடையாளங்கண்டு கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | எந்தவொரு கொடுக்கல் வாங்கல்கலும் இடம்பெறாது நாட்குறிப்பின் மூலம் ரூபா 20,178,561 தொகை கடன்பட்டோர் கணக்கிற்கு வரவு வைத்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய வட்டி கணக்கிற்கு செலவு வைத்ததனால் அக்கணக்குகள் அப்பெறுமதியால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய கணக்கீட்டு சீராக்கலினை நாட்குறிப்பின் மூலம் சரிசெய்து சமர்ப்பிப்பேன். | உண்மையாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களுக்குரிய செம்மையாக்கல்களை நிதிக்கூற்றுக்கில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையே அமுல்படுத்தப்பட்ட தேயிலை மற்றும் பெற்றோலிய உடன்படிக்கையின் நிதி நிருவாகத்திற்காக சபையினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,800,000 நிருவாக வருமானம் மற்றும் ரூபா 40,000 வங்கி கட்டண வருமானமாக அடையாளங்காணப்பட்டிருக்காததனால் ரூபா 1,840,000 ஆல் சபையின் மிகை குறைத்து கணிக்கப்பட்டு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய பெறுமதி மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் போது கடந்த ஆண்டிற்கான இலாபத்திற்கு செம்மையாக்கப்பட்டதன் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. | சபையின் செயற்பாடுகளின் மூலம் உருவாகிய வருமானத்தை சரியாக அடையாளங்கண்டு கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | கொடுக்கல் வாங்கல்தாரர்களால் சபையின் வங்கி கணக்குகளுக்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட ரூபா 27,305,276 பணத்திற்கான வருமான மூலங்களை அடையாளங்கண்டு கணககீடு செய்யாமையால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | 2025/01/31 அந் திகதி வரையான நேரடி வைப்புக்களில் ரூபா 9,634,259 தொகைக்கான வருமான மூலங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளது. மிகுதி வைப்புக்களை அடையாளம் காண்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதி ஆண்டிற்கான அனைத்து வருமானங்களையும் கணக்குகளில் வெளிப்படுத:துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| **விடயம்** | **நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி** | **துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி** | **வித்தியாசம்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| ஆய்வுகூட வருமானம் | 52,431,050 | 55,591,150 | 3,160,100 | ஆய்வுகூட வருமானத்தின் வித்தியாசத்தை குறைப்பதற்கும் அந்த வித்தியாசத்திற்கான காரணத்தை முறைமையினூடாகப் பெற்றுக்கொள்வதற்கும் | சபையின் ஆய்வு கூட பரீட்சிப்பு தொடர்பான கட்டுப்பாட்டினை வலுப்படுத்தி அந்த வருமானத்தை |

| | | |
|---|---|---|
| | ஆய்வுகூட வருமானத்தை அடையாளங் காண்பதற்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தேயிலைக் கொழுந்துகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை கிடைக்காமையால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுக்காக கொடுப்பனவு செய்வதற்கு தேயிலை தொழில்சாலைகளால் சபையில் ரூபா 92,049,849 வைப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை தேயிலை கொழுந்து உரிமையாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குனர்கள் தொடர்பான சரியான விபரங்கைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க உரிய வழங்குனர்களை அத்தொழிற்சாலைகளுக்கு அழைத்து எங்களின் உத்தியோகத்தர்களுக்கு முன்னிலையில் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் வழங்குனர்கள் அல்லது கேள்விதாரர்களை அடையாளங்காணமுடியாத பணத்தை இலங்கை தேயிலை சபையின் கணக்குகளில் தொடர்ந்தும் நிறுத்திவைத்தல் மற்றும் உரிய தொழில்சாலைகளால் மேற்கொள்ளப்படுகின்ற வேண்டுதல்களுக்கு இணங்க விடுவிபபதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய தரப்பிர்களை சரியாக அடையாளங்கண்டு அவர்களுக்கு தகமையுள்ள பணத்தை துரிதமாக தீர்த்து வைத்தல் வேண்டும். |

**1.6.2 முற்பணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையினால் 25 மில்லியன் தேயிலை நாற்றுக்கள் விசேட செயற்திட்டத்திற்காக சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2021 யூலை 14 ஆந் திகதி வழங்கிய ரூபா 125,000,000 முற்பணத்தில் தீர்த்து வைக்கப்படாத பணம் ரூபா 26,369,363 ஆகும். | இச்செயற்திட்டம் தொடர்பாக முழுமையாகச் சான்றுபடுத்தப்பட்ட செலவு அறிக்கை சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க அது தொடர்பான கணக்கீட்டு செம்மையாக்கல்கள், கொடுப்பனவுகளுக்குரிய வவுச்சர்கள் என்பவற்றை சிறிய தேயிலைத் | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திடட்த்திற்காக பயன்படுத்தப்படாத பெறுமதி காணப்படுமாயின் மீள அறவீடு செய்வதற்கும் உரிய முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கும் |

| | | |
|---|---|---|
| அதிகாரசபையுடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் காலமும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்திருந்தும் முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையினால் இலங்கை தேயிலைச் சபைக்கு சமர்ப்பித்ததன் பின்னர் துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். | சபையினால் துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைதுத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | சபையின் மனித வளங்கள் முகாமைத்துவத்தினை உள்ளடக்கிய செயற்பாட்டு நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான செயற்பாட்டு கையேடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் செயற்பாட்டு கையேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வளவாளர் ஒருவரினை நிமிப்பதற்குத் தேவையான பெறுகை நடைவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் போது இக்கையேட்டினை வரைபாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | செயற்பாட:டு கையேட்டினைத் தயாரித்து அதன் செயற்பாடுகளை முறையான அங்கிகாரத்தின் கீழ் அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) 2023 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய 2343/63 ஆம் இலக்க இலங்கை சனநாயக சேசலிசக் குடியரசின் இன் வர்த்தமானி மற்றும் அமைப24/0152/612/014 ஆம் இலக்க 2024 பெப்ரவரி 13 ஆந் திகதிய | சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிதியத்திற்கு மாற்றப்படுகின்ற அனுமதிப்பத்திர கட்டண பெறுமதியானது தேயிலை சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக சபையினால் தேயிலை மேம்பாட்டு நிதியத்திலிருந்து சனாதிபதி செயலக நலன்புரிச் சங்கத்திற்கு | தேயிலையை உள்நாட்டு ரீதியாக மேம்படுத்துவதனை குறிக்கோளாகக் கொண்டு தேசிய மேம்படுத்துதல் செலவுத் தலைப்பின் கீழ் இதற்காக ரூபா 1,000,000 பணப் பங்களிப்பு வழங்கப்பட்டிலுருந்தது. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் இலங்கை தேயிலை சபையின் | அமைச்சரவை தீர்மானம் மற்றும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சந்தைப்படுத்துதல் மேம்படுத்தல் நிதியத்திற்கு மாற்றப்படுகின்ற அனுமதிப்பத்திர கட்டணத்தின் பெறுமதியை யேிலை சந்தைப்படுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| அமைச்சரவை தீர்மானம் | ரூபா 1,000,000 மற்றும் தேசிய பொருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு ரூபா 35,000,000 பணம் வழங்கப்பட்டிருந்தது. | மூலம் மேற்கொள்ளுகின்ற அபிவிருத்தி, ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஏற்றுமதி பிரிவுடன் இணைந்து செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்பப்படுத்தப்படுவது சம்பந்தமாக பங்களிப்பு வழங்கப்படுகின்றது. இலங்கை யேிலை சபையின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிதியத்திற்கு அறவிடப்பட்டு மாற்றப்படுகின்ற அனுமதிப் பத்திர கட்டணங்களிலிருந்து 50 சதத்தினை தேயிலைப் பயிர்ச்செய்கை மற்றும் தேயிலை கைத்தொழிலின் அபிவிருத்திக்காக செலவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | மேம்பாட்டு நடவடிக்கைகளுக்குப் புறம்பான செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 147,414,751 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 194,872,796 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 47,458,045 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அபிவிருத்தி மற்றும் நிருவாகச் செலவுகள் முறையே ரூபா 1,123,281,624 மற்றும் ரூபா 65,768,374 ஆல் அதிகரித்தல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் றம்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு**

அபிவிருத்திச் செலவுகளுக்காக மேம்படுத்துதல் வரி நிதியத்திலிருந்தும் அனுமதிப்பத்திர கட்டணங்களின் மூலமும் பெற்ற வருமானம் ரூபா 1,503,030,247 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுசெய்த போது நிலையான வைப்பு வட்டி வருமானம் 19 சதவீத்தில் குறைவடைந்திருந்ததுடன் ஆய்வுகூட வருமானம் 66 சதவீதத்தினாலும் தேயிலையை மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் வரி நிதியத்தின் வட்டி வருமானத்திலிருந்து தேயிலைச் சபைக்கு மாற்றப்பட்ட நிதியின் அளவு 79 சதவீதத்தினாலும் வணிக செயற்பாடுகளின் மூலமும் உழைத்த இலாபம் 12 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

அபிவிருத்தி, நிதி, நிருவாகம் ஆகிய செலவுகள் முறையே 335 சதவீதத்தினாலும் 23 சதவீதத்தினாலும் மற்றும் 12 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் நடைமுறை மற்றும் விரைவுச் சொத்து விகிதம் 3:1 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அந்த விகிதம் 3:1 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறைச் சொத்துக்கள் 07 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும் நடைமுறைப் பொறுப்புக்களும் அதற்கு நேரொத்த வகையில் 07 சதவீத்தால் குறைவடைந்திருந்ததன் காரணமாக இந்த விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மாற்றமின்றிக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சிலோன் தேயிலையின் சிங்கம் இலச்சினை வியாபாரக் குறியினை பிரசித்தப்படுத்துவதற்காக ரூபா 597,688,264 தொகையான நிவாரணம் தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கு தேயிலையை மேம்படுத்துதல் வரி நிதியத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் பொருண்மையான இலக்குகள் அடைந்துகொள்ளப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சிங்கம் இலச்சினையுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதி அளவு எவ்வவு என்பதனை அடையாளம் காண்பதற்காக உறுதியான ஒரு நடைமுறை சபையினால் இன்று வரை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சிங்கம் இலச்சினையுடனான தேயிலையை ஏற்றுமதி செய்யும் போது நிலைமையை புரிந்துகொள்வதற்கு இருந்த தடைகள் தற்பொழுது தீர்த்துவைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அந்த இலச்சினையுடன் பெறுமதி சேரக்கப்பட்ட தேயிலை ஏற்றுமதி அளவு எவ்வளவு என்பதனை அயைடாளம் காண்பதற்காக இலங்கை சுங்கத்துடன் கலந்துரையாடி அதற்குத் தேவையான தகவல்கள் CUSDEC பத்திரத்தில் உள்ளடக்கி CUSDEC பத்திரத்தினூடாக எதிர்காலத்தில் இந்த சிங்கம் இலச்சினையுடன் தயாரிக்கப்பட்ட தேயிலையின் ஒட்டுமொத்த தகவல்களை பெற்றுக்கொள்ளும் நடைமுறை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது அமுல்ப்படுத்தும் கட்டத்தில் காணப்படுகின்றது. | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்கு அடைந்துகொள்ளப்பட்டுள்ளதா என்பதற்கும் அதன் கிரயத்திகு ஒப்பீடான பிரதிபலனகளை உறுதிப்படுத்துவதற்காகவும் நிலையான நடைமுறையினை அறிமுகப்படுத்துவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ‘‘டீ மோமன்ட்ஸ்’’ எனும் பெயரிலான கொழும்பு தேயிலை சந்தைப்படுத்தல் நிலையத்தினால் சபைக்கு | இலங்கை தேயிலை சபையினால் தொடக்க புலனாய்வு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் புலனாய்வு அறிக்கை இலங்கை தேயிலைச் | இந்த நட்டத்திற்காக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அடையாளங்கண்டு நட்டத்தை அறவீடு |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 62,603,006 நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் பொருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு செயலாளரின் 2016 திசெம்பர் 06 ஆந் திகதிய கடித்தின் மூலம் கவனயீனமாக செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தலைவருக்கு தெரியப்படுத்தியிருந்தும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு இன்று வரை கிடைத்திருக்கவில்லை. | செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2012 யூன் 19 ஆந் திகதி நடைபெற்ற இலங்கை தேயிலை சபையின் பொது தொழில் முயற்சிகள் தொடர்பான குழுவின் பணிப்புரை இலக்கம் 11 இன் பிரகாரம் சபையினால் 2003 ஆம் ஆண்டின் போது மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு வழங்கிய ரூபா 25,000,000 கடனுக்காக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஹந்தானையில் அமைந்துள்ள “Ceylon Tea Museum” இன் உரிமையை தேயிலைச் சபைக்கு ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்த போதிலும் இன்றுவரை சொத:துக்களின் உரிமையை பொறுப்பேற்பதற்கு அல்லது கடனை மீள அறவீடு செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2020 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தேயிலைச் சபைக்கு ரூபா 10,000,000 கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் | பொறுப்பேற்கும் நடவடிக்கை சம்பந்தமாக அமைச்சு செயலாளரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் மூலம் ஆதனத்தின் சட்டரீதியான தன்மை சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | சபையினால் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இக்கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதேபோல பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் பணிப்புரையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் ணேடும். |

| | | | |
|---|---|---|---|
| | அதில் ரூபா 1,000,000 மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | களுத:துறை பிராந்திய அலுவலகம் செயற்பட்டு வருகின்ற 01 ரூட் 20 பேச்சர்ஸ் பரப்பளவுள்ள காணியை 2014 ஆம் ஆண்டிலிருந்து 30 ஆண்டுகள் காலத்திற்கு இலங்கை தேயிலை சபைக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு காணி ஆணையாளர் நாயகத்தினால் மேல்மாகாண காணி ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 4/10/37833 ஆம் இலக்க கடிதத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தும் இதுவரை குத்தகை உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. | இலங்கை தேயிலைச் சபை வேண்டிக்கொண்டிருந்தும் குத்தகை உடன்படிக்கையை தயாரித்தல் பாலிந்தநுவர பிரதேச செயலகத்தினால் என்பதனால் இதுவரை அந்த குத்தகை உடன்படிக்கை தயாரித்து சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக இந்த உடன்படிக்கை செய்தல் தாமதமடைந்துள்ளது. | சட்டரீதியான குத்தகை உடன்படிக்கையை மேற்கொள்வதன் மூலம் சொத்துக்களின் கட்டுப்பாட்டை முறைமைப்படுத்துதல் வேண்டும். |
| (உ) | நுவரெலியா பிராந்திய அலுவலகம் செயற்பட்டு வரும் காணியின் உரிமை களணிவெலி கம்பனியிடமிருந்து நுவரெலியா பிரதேச செயலகத்தின் மூலம் சட்டரீதியாக சபையினால் பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. | நுவரெலியா பிராந்திய அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியை இலங்கை தேயிலை சபையினால் பொறுப்பேற்பது தொடர்பான நடவடிக்கை இடம்பெற்று வருவதுடன் இக்காணியை பொறுப்பேற்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் போது ஏனய அரசாங்க நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு மேற்கொள்வதன் காரணமாக தாமதமடைந்துள்ளது. | சட்டரீதியான உரிமை இல்லாத ஒரு காணியில் கட்டிடத்தினை நிர்மாணித்தல் இடம்பெற்றுள்ளதனால் காணியின் சட்டரீதியான உரிமையை சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ‘‘சிலோன் டீ’’ இதற்காக உலகளாவிய மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் | சிலோன் டீ இற்காக உலகளாவிய மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் | இந்த ஆக்கபூர்வ செயற்பாடுகளை நிகழ்காலத்தில் பயன்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மரபுரீதியான உயர்ந்த மட்டத்திலான பிரசித்தப்படுத்தல்களுக்காக தொலைக்காட்சி வியாபார விளம்பரங்களை உருவாக்குவதற்கும் அதனை சீன, ஜப்பான், அரபு, உக்ரேன், ஜேர்மன், துருக்கி ஆகிய மொழி ஊடகங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மொழி பெயர்ப்புக்களுக்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 174,332,138 செலவு செய்யப்பட்டிருந்தும் அந்த வியாபார விளம்பரங்களை உருவாக்கும் தொடக்க குறிக்கோளான தொலைக்காட்சி ஊடகத்தினூடாக விளம்பரத்தினை மேற்கொள்வதற்கு தேவையான ஊடகங்களை கொள்வனவு செய்தல் மற்றும் அது சம்பந்தமாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்காததனால் தொலைக்காட்சி ஊடகங்களின் மூலம் விளம்பரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 39,832,808 செலவு செய்து உருவாக்கப்பட்ட 31 ஆக்கபூர்வ செயற்பாடுகளும் மீாய்வாண்டின் இறுதிவரையும் உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | தொடக்கத்தில் தொலைக்காட்சி ஊடகங்களில் பிரசித்தப்பத்துவதனை குறிக்கோளாகக் கொண்டு இந்த வியாபார விளம்பரங்கள் உருவாக்கப்பட்டன. எவ்வாறாயினும் இதற்காக ஊடகங்களை கொள்வனவு செய்தல் இடம்பெறாத போதிலும் இந்த வியாபார விளம்பரம் பல்வேறு பிரசித்தப்படுத்துதல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டது. | உள்ள இயலுமை தொடர்பாக முறையான மதிப்பீட்டினை மேற்கொண்டு அதனை அடிப்படையாகக் கொண்டு உலகளாவிய மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் நிகழ்சித்திட்டங்களுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை தேயிலை சபையினால் அமுல்ப்படுத்தப்படுகின்ற "சிலோன் டீ" இற்காக உலகளாவிய மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் நிகழச்சித்திட்டங்களை ஆக்கபூவர்வமான நடவடிக்கைகளின் கீழ் www. pureceylontea.com பிரதான | உலகளாவிய மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்தமையின் காரணமாக இந்த இணைய தளத்திற்காக எதிர்பார்த்த மேம்பாடு கிடைக்கவில்லை. என குறிப்பிடுதல் வேணடும். எவ்வாறாயினும் இந்த இணைய தளத்தினை தேயிலைச் சபை | சர்வதேச ரீதியாக நுகர்வோர்/ பாவனையாளர் கவர்ச்சியினை இணைய தளத்தினால் அடைந்து கொள்வதன் மூலம் உலகளாவிய மேம்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | இணையவழி மற்றும் ஏனைய மொழி பெயர்க்கப்பட்ட இணைய வழி தரவுகளுக்கு இணங்க மீளாய்வாண்டில் வெளிநாட்டு பாவனையாளர்கள் அணுகுதல் 29,228 அளவில் அவதானிக்கப்பட்டதுடன் ரூபா 172,939,768 கிரயத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இணைய தளத்திற்கு சர்வதேச ரீதியாக போதியளவான நுகர்வோர்/ பாவனையாளர் கவர்ச்சி கிடைத்திருக்கவில்லை. | அமுல்ப்படுத்துகின்ற அனைத்து பிரசித்தப்படுத்தல் நடவடிக்கைகின் போதும் தேவையான பிரசித்தப்படுத்தலினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிகழசிசத்திட்டங்களின் கீழ் எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக இணைய தளத்தினை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை தேயிலையை உலகளாவிய ரீதியாக மேம்படுத்துவதற்காக ஊடக மீளாய்வு மற்றும் ஊடனகத் திட்டத்தினை தயாரிப்பதற்காக 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 107,088,740 பணம் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில் லை. மேலும் தயாரிக்கப்பட்ட ஊடகத் திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் குறிப்பிடப்பட்ட காலம் காலாவதியாகியிருந்தது. | ஊடகத் திட்டங்களை அமுல்ப்படுத்துதல் உரிய காலப்பகுதிக்குள் இடம்பெறவில்லை என ஏற்றுக்கொள்கிறேன். | ஊடகத்திட்டங்களினை நிகழ்காலத்தில மற்றும் எதிர்காலத்தில் பயன்படுத:துவதற்கு உள்ள இயலுமை தொடர்பாக முறையாக மதிப்பீடு செய்து அத்திட்டத்தை உலகளாவிய ரீதியான மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | இந்து இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) மற்றும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (PSFTA) கீழ் தேயிலைக்காக விருப்புக கட்டண விகிதம் (Preferential Tariff Rate Quota) காணப்பட்டிருந்தும் அதன் குறிப்பிடத்தக்க அளவான பயன்பாடு 2021 இலிருந்து 2024 வரை அறிக்கையிடப்படாதிருந்ததுடன் பாகிஸ்தானுக்கு வியாபார | இந்து இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஆகிய உடன்படிக்கைகளின் கீழ் எதிர்பார்த்த ஏற்றுமதி அளவினை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்ததானது ஏனைய போட்டியான தேயிலையை ஏற்றுமதி செய்கின்ற நாடுகளிலிருந்து அவர்களுக்கு தேவைப்படுகின்ற தேயிலை மிகவும் குறைந்த விலைக்கு | சுதந்திர உடன்படிக்கைகளின் மூலம் உச்ச அளவு பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கு உள்ள மட்டுப்பாடுகளை நீக்கி ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக சபையினால் மேற்கொள்ளக்கூடிய பங்களிப்பினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையின் கீழ் தேயிலை ஏற்றுமதி செய்யப்படவில்லை எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பெற்றுக்கொள்ளக் கூடியமையினாலாகும். இந்த வர்த்தக உடன்படிக்கையின் கீழ் Quota களுக்கு தேவைப்படுகின்ற தேயிலை அளவினை வழங்குவதற்கு முடியதிருந்ததானது இலங்கை தேயிலையின் விலை அதிகமாக இருப்பதனாலாகும். | |
| (உ) | இலங்கையின் முழு தேயிலை உற்பத்தியும் ஏற்றுமதியும் படிப்படியாக அதிகரிக்காமையின் காரணமாக 2011 ஆம் ஆண்டின் போது 7.4 சதவீதமான உலகளாவிய தேயிலை உற்பத்திப் பங்கு மற்றும் 17.1 சதவீதமான உலகளாவிய தேயிலை ஏற்றுமதி சந்தைப்பங்கு மீளாய்வாண்டு வரை முறைப்படியாக 3.7 சதவீதம் மற்றும் 13 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது என தேயிலை குழு செய்தித்தாள் பிற்சேர்க்கையின் (Supplement to Annual Bulletin of Statistics - 2024) பிரகாரம் அவதானிக்கப்பட்டதுடன் இலங்கை தேயிலை சபையினால் தேயிலை உற்பத்தி மற்றும் மேம்படுத்துதல் நடவடிக்கைகளுக்காக முறையே ரூபா 10,127,936,991 மற்றும் ரூபா 5,439,616,283 தொகையான செலவுகள் 2011 இலிருந்து 2024 வரையான காலப்பகுதிக்காக மேற்கொள்ளப்பட்டிருந்தும் உலகளாவிய சூழலில் இலங்கை தேயிலைக்குரிய இடம், சந்தை என்பன படிப்படியாக இழக்கப்படுதல் இடம்பெற்றுள்ளது என அவதானிக்கப்பட்டது. | ஒட்டுமொத்த தேயிலை உற்பத்தி தற்பொழுது தேயிலை 250-260 மில்லியன் கிலோ எல்லை வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் ஏற்றுமதி அளவும் அதற்கு நேரொத்த வகையில் வீழ்ச்சியடைந்துள்ளது.<br><br>ஏனைய தேயிலை உற்பத்தி செய்கின்ற நாடுகளான சீனா, இந்தியா, கென்யா மற்றும் ஏனைய ஆபிரிக்க நாடுகள் தமது தேயிலை உற்பத்தியை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிததுள்ளதனால் இலங்கையின் தேயிலை உற்பத்தியானது உலக தேயிலை உற்பத்திச் சதவீதமாக வீழ்ச்சியடைவதற்கு இந்நிலைமை தாக்கமளித்துள்ளது. | தேயிலை உள்பத்தியை அதிகரிப்பதற்கும் உலகளாவிய சந்தையில் இலங்கை தேயிலைக்கான பங்கினை அதிகரிக்கச் செய்வதற்கும் உயரந்த தரமான சர்வதேச நியமங்களுக்கு இணங்கிய பொருத்தமான தேயிலைக்கான முதலீட்டினை விரிவுபடுத்துவதற்காக தேவையான ஊக்குவிப்புக்களை கைத்தொழில்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒங்குபடுத்தல்கள் கட்டுப்பாடுகள் என்பன சபையினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 3.3 பயன்படுததப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் என்பன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதான களஞ்சியத்தின் எழுதுகருவி இருப்பில் உள்ளடக்கப்பட்ட நீண்டகாலம் அசைவற்ற இருப்பாக காணப்படும். ரூபா 1,326,816 பெறுமதியான 542 செரன்டிப் டீ பிலம் DVD நாடாக்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 500 டீ பொட்களில் ரூபா 587,755 கிரயமான 245 டீ பொட்டிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. தேவைப்பாட்டினை சரியாக அடையாளம் காணாமையால் மெதுவாக அசைகின்ற மற்றும் காணாமையால் நீண்டகாலமாக அசைவற்ற இருப்புக்களை கொள்வனவு செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட நிதி விளைவற்றுக் காணப்பட்டது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இதில் குறிப்பிட்ட DVD ஆனது தற்பொழுது அதன் தேவைப்பாடுகின்ற தரப்பினர்களின் வேண்டுதலின் அடிப்படையில் வழங்கப்படும். இந்த DVD தட்டுக்களை எதிர்காலத்தில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைப்பாட்டினை சரியாக அடையாளங்கண்டு சிறந்த மட்டத்தில் இருப்புக்களை கொள்வனவு செய்து அந்த இருப்புக்களை உரிய குறிக்கோளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் பணிப்பாளர் சபை அறையின் உட்கூரையை திருத்தம் செய்வதற்காக ரூபா 2,902,817 தொகைக்கு ஒரு தனியார் கம்பனிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்த தொகையில் 20 சதவீதம் உச்ச அளவிற்கு உட்பட்டு முற்பணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ரூபா 1,643,327 தொகை அதாவது 50 சதவீதம் முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | ஆகக்குறைந்த விலை மனுவை சமர்ப்பித்திருந்த வழங்குனர் தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பின் பிரகாரம் தகமையை பெற்றிருந்ததுடன் அவரினால் 50% ஆன முற்பணம் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தது . அரசாங்க பணத்திற்கான ஆபத்தினைக் குறைத்து 50% முற்பண பிணையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 மனதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட உயர்நத முகாமைத்துவ மட்டத்தைச் சேரந்த பிரதிப் பணிப்பாரள் (சந்தைப்படுத்தல்), பணிப்பாளர் (அபிவிருத்தி), பணிப்பாளர் (நிதி) மற்றும் பணிப்பாளர் (நிருவாகம்) ஆகிய 04 பதவிகளுக்காக உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு இணங்க பிரதிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) பதவியினை குறைப்புச் செய்வதற்காக 2023-10-13 ஆந் திகதிய பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு செயலாளருக்கு வரைபாக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 2023-10-06 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது பணிப்பாளர் (நிருவாகமும் மனிதவளமும்) பதவியினை நிரப்புவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் (மேம்படுத்தல்) பதவிக்காக நாடளாவிய அடிப்படையில் ஒரு உத்தியோகத்தரினை நியமிப்பதற்கு வரிசை அமைச்சிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | சபையின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு மற்றும் செயலாற்றலினை அதிகரிப்பதற்கு அத்தியவசியமான பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கும் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆளணியை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 முகாமைத்துவ தகவல் முறைமையின் ஆக்கபூர்வதன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தேயிலை கைத்தொழிலுக்காக ஒரு தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தயாரிப்பதற்காக ரூபா 53,964,995 ஒப்பந்த பெறுமதியின் அடிப்படையில் சபையின் உதவிப் பணிப்பாளரின் (தகவல் தொழில்நுட்பம்) உறுதிப்படுதலும் மொத்தமாக ரூபா 15,716,148 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை ஒரு தனியார் நிறுவனத்ததிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. 04 ஆண்டுகளுக்கு அண்மிதத்த காலம் எடுத்திருந்தும் முறைமை | தகவல் தொழில் நுட்ப முறைமையின் நிகழ்கால செயல்முன்னேற்றம் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் தற்பொழுது ஒரு நிறுவனமாக முகங்கொடுக்கின்ற பிரதான தடை தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது. செயலாற்றல் பிணைகளின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்புச் செய்வதற்காக தனியார் நிறுவனத்திற்கு | செயலாற்றல் பிணையை நீடிப்புச் செய்யும் நடவடிக்கையையும் தகவல் தொழில்நுட்ப முறைமையை ஸ்தாபிக்கும் நடைமுறையையும் துரிதமாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மேற்கூறிய தொடக்க உடன்படிக்கைக்குப் புறம்பாக ரூபா 2,822,400 தொகையான ஒப்பந்தம் வழங்குதல் 2022 செப்தெம்பர் 01 ஆந் திகதி மேற்கூறிய தனியார் நிறுவனத்திற்கே மேற்கொள்ளப்பட்டிருந்தது. 02 ஒப்பந்த வழங்குதல்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் தனியார் நிறுவனத்தினால் வழங்கிய செயலாற்றல் பிணைகளின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்தும் கணக்காய்வுத் திகதி வரையும் உடன்படிக்கையினை காலநீடிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.